22.04.2026

O.S.N0.284/2021

D.W.3.திரு.சேக்முகமது

சாட்சி மீண்டும் அழைக்கப்பட்டு வாதிகள் தரப்பில் குறுக்கு விசாரணை தொடர்ச்சி :–

வழக்கு 2ம் தபசில் சொத்து நானும், 5ம் பிரதிவாதியும் மைனராக இருக்கும்போது 1971ல் வாங்கப்பட்ட சொத்து என்றால் சரிதான். மேற்சொத்து எவ்வளவு தொகைக்கு யாரிடம் இருந்து வாங்கப்பட்டது என்ற விவரம் எங்களுக்கு தெரியாது என்றால் சரிதான். 2ம் தபசில் சொத்து கூட்டுக்குடும்ப சொத்து என்றால் சரியல்ல. 1ம் தபசில் சொத்து உபவாதிகளுக்கு கூட்டாக பாத்தியப்பட்ட சொத்து என்றால் என்னுடைய தகப்பனார் அவரின் ஆண் குழந்தைகளுக்கு எழுதி வைத்தாக சொல்லி எனக்கு தெரியும். நேரடியாக எனக்கு தெரியாது என்றால் சரிதான். எனது அப்பா நல்ல வசதியாக தான் இருந்தார் என்றால் சரிதான். எனது அப்பா வசதியாக இருந்ததால் எனது அம்மா தையல் தொழில் மற்றும் பால் வியாபாரம் செய்ய அவசியமில்லை என்றால் அவசியமில்லை ஆனால் எனது அம்மா அவர் விருப்பபடி தொழில் செய்தார். இது சம்மந்தமாக ஆவணங்கள் எதுவும் நீதிமன்றத்தில் தாக்கல் செய்யவில்லை என்றால் சரிதான். நாங்கள் தாக்கல் செய்துள்ள எதிர்வழக்குரையிலும் மேற்படி விவரத்தை சொல்லவில்லை என்றால் சரிதான். 1, 2 தபசில் சொத்துக்கள் ஆண் பிள்ளைகளுக்கு மட்டும் பாத்தியப்பட்ட சொத்து இல்லை என்றால் சரியல்ல. 2ம் தபசில் சொத்து மைனராக இருக்கும் போது வாங்கப்பட்ட சொத்துக்கள் என்பதால் அவை கூட்டுக்குடும்ப

சொத்துக்கள் என்றால் சரியல்ல. எனது தகப்பனார் 23.12.2005 ல் ஆண் மக்களுக்கு வா.சா.ஆ.1 மூலமாக எழுதி வைத்த செட்டில்மெண்ட் ஆவணம் பற்றி எனக்கு தெரியாது. எனது தகப்பனார் அந்த காலக்கட்டத்தில் உடல்நிலை சரியில்லாமல் படுத்தபடுக்கையாக இருந்தார் என்றால் சரியல்ல. நோய்வாய்பட்டுயிருந்த எனது தகப்பனாரை நாங்கள் தூக்கி சார்பதிவாளர் அலுவலகம் சென்று செட்டில்மெண்ட் எழுதி வாங்கினோம் என்றால் சரியல்ல. எனது தகப்பனார் 1ம் தபசில் சொத்து பொறுத்து எழுதி வைத்த செட்டில்மெண்ட் செல்லத்தக்கது அல்ல என்றால் சரியல்ல. எனது அப்பாவை பார்ப்பதற்கு பெண் மக்கள் வீட்டிற்கு வந்து, சென்று கொண்டுயிருந்தார்கள் என்றால் எனது அப்பா, அம்மாவை பார்க்க எப்பொழுதாவது வருவார்கள். எனது அப்பா சுயநினைவுடன் இருந்திருந்தால் பெண்மக்களுக்கும் சொத்து கொடுத்திருப்பார் என்றும் நான் வழக்கிற்காக பொய்யாக சொல்கிறேன் என்றால் சரியல்ல. எனது அப்பா எழுதி வைத்துள்ள செட்டில்மெண்ட் பத்திரத்தை படித்துப்பார்த்துள்ளேனா என்றால் படித்து பார்த்தேன். அதில் சாட்சி கையெழுத்திட்ட நபர்களை தெரியுமா என்றால் அவர்கள் இறந்துவிட்டதாக கேள்விப்பட்டேன். நான் எனது சகோதரிகளுக்கு சொத்துகொடுக்ககூடாது என்பதற்காக பொய்யாக சாட்சியம் அளிக்கிறேன் என்றால் சரியல்ல.

**மறுவிசாரணை இல்லை.**

Taken down before me in open court and read over to the witness and acknowledge by him to the correct

I Additional District Judge,

Tirunelveli.